**விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(அக்டோபர் 24-ம் தேதி முதல் அக்டோபர் 28-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (20.10.15- 22.10.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 6.6 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 33- 34 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24- 25 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4- 7 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 72- 76 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 57- 72 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 7- 11 |
| காற்றின் திசை | 90- 180 |

**28.10.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 24.10.15 | நாள் 2 25.10.15 | நாள் 3 26.10.15 | நாள் 4 27.10.15 | நாள் 5 28.10.15 |
| மழை (மி.மீ.) | 3 | 4 | 0 | 2 | 2 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34 | 34 | 34 | 34 | 33 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24 | 24 | 24 | 24 | 23 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 65- 70 | 66- 72 | 67- 74 | 68- 76 | 74- 85 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 10/ கிழக்கு | 10/ கிழக்கு | 10/ கிழக்கு | 10/ கிழக்கு | 12/ கிழக்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் / சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| பருத்தி, சோளம், மக்காச்சோளம், பயறுவகைகள் | விதைத்தல் | வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் மானாவாரியில் பருத்தி, சோளம், மக்காச்சோளம் மற்றும் பயறுவகைகள் ஆகிய பயிர்களை விதைப்பு செய்யவும். விதைகளை 3 செ.மீ. ஆழத்தில் விதைக்கவும். மண்ணின் ஈரம் சரியான பக்குவத்தில் இருக்கும்போது உரம் மற்றும் விதை விதைப்புக்கருவியைப் பயன்படுத்தவும். |

| | | |
|---|---|---|
| | பயிர் இடைவெளி | மானாவாரியில் பயிர் இரகங்களுள் பருத்தி, சோளம் போன்ற பயிர்களை 45 x 15 செ.மீ. இடைவெளியிலும் மக்காச்சோளத்தை 45 x 20 செ.மீ. இடைவெளியிலும் பயறுவகைகளை 30 x 10 செ.மீ. இடைவெளியிலும் விதைக்கவும், வீரிய ஒட்டு இரகங்களுக்கு இடைவெளியாக பருத்திக்கு 90 x 60 செ.மீ. மற்றும் மக்காச்சோளத்திற்கு 60 x 25 செ.மீ. என்ற அளவை பின்பற்றவும். |
| | உரமிடுதல் | மானாவாரி பயிர்களை விதைக்கும்போது அடியுரமாக தழை, மணி, சாம்பல் சத்துக்களை (கிலோ/ எக்டர்) பருத்தி வீரிய ஒட்டு இரகங்களுக்கு 80: 40: 40, சோள இரகங்களுக்கு 40: 20: 0, மக்காச்சோள வீரிய ஒட்டு இரகங்களுக்கு 135: 62.5: 50 மற்றும் பயறு வகைகளுக்கு 12.5: 25: 0 என்ற அளவில் இடவும். |
| பருத்தி, சோளம், மக்காச்சோளம் மற்றும் பயறுவகைகள் | நாற்று பருவம் | வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால் வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க மானாவாரி பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்யவும். |
| | | மண்ணில் போதிய அளவு ஈரம் இருக்கும் தருணத்தில் மானாவாரியில் விதைக்கப்பட்டுள்ள பருத்தி, சோளம், மக்காச்சோளம், பயறுவகைகள் போன்ற பயிர்களில் போதிய அளவு பயிர் எண்ணிக்கையை பராமரிக்கும் பொருட்டு விதைகள் முளைக்காத இடங்களில் மறு விதைப்பு செய்யவும். அதே போல் பயிர் எண்ணிக்கை தேவையான அளவுக்கும் அதிகமாக உள்ள இடங்களில் மிகையாக உள்ள செடிகளை களைந்து சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும். |
| | | பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் களை முளைத்து வருவதற்கு முன்பு அடிக்கப்படும் களைக்கொல்லி பயன்படுத்தப்படவில்லையெனில் களைகள் இளம் பருவத்தில் இருக்கும்போது பயன்படுத்தப்படும் களைக்கொல்லியான குயிசலோபாப் எத்தில் 5% EC 1 லிட்டர்/ எக்டர் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி லிட்டர்) மற்றும் இமாசெதபைர் 10% EC 0.5 லிட்டர்/ எக்டர் (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர்) ஆகியவற்றை விதைத்த 15- 20 ம் நாளில் தெளிக்கவும். |
| பருத்தி | பசுந்தாள் உரமிடுதல் | மானாவாரியில் மண்வளத்தை மேம்படுத்த பசுந்தாள் உரப்பயிரான தக்கைப்பூண்டினை பருத்தியில் ஊடுபயிராக 2:1 என்ற விகிதத்தில் சாலில் விதைக்கவும். பசுந்தாள் உரப்பயிரினை விதைத்த 45- 50ம் நாளில் இயந்திர களையெடுக்கும் கருவியைக்கொண்டு மடக்கி மண்ணுள் அழுத்தவும். |

குறுஞ்செய்தி: மழை: அக்டோபர் 25- 28: 3, 4, 0, 2& 2 மி.மீ. வடகிழக்கு பருவமழை அக்டோபர் 28ம் தேதியை ஒட்டி தொடங்குவதற்கு சாதகமான சூழ்நிலை உள்ளது.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி